சூரிய காந்தி
SOORIYA GANDHI

விலை ரூபா 5-00

வினோவின் தரம்
என்றும் நிரந்தரம்

புதிய சிங்கப்பூர் டிசைன் நகைகள்
22 கரட் நகைகள் பெற
நம்பிக்கையான இடம்

வினோ நகைப் பூங்கா

185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மலர் 1 செவ்வாய்க்கிழமை 17 - 2 - 1998 இதழ் 16

# வட-கிழக்கு மாகாணத் தேர்தல்

# தயாராகிறது த. வி. கூட்டணி

## கட்சி வட்டாரங்கள் தகவல்

மாகாணசபை தேர்தல் தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணி தீவிரமாக கவனம் செலுத்தி வருவதாகவும் வடக்கு கிழக்கு மாகாணசபையை எப்படியும் கைப்பற்ற வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தற்போது அக்கட்சி செயற்பட்டு வருவதாக கொழும்பிலிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

அநேகமாக தமிழர் விடு

அரசியல் நிலைப்பாட்டை

இது விடயமாக கட்சி

## ஒரு மாதச் சம்பளம் 24 லட்சம் ரூபா

இலங்கையில் ஆகக்கூடுதல் சம்பளம்பெறும் நபர் இலங்கை விமானப்படை கிபிர்விமான விமானிக்குப் பயிற்சியளிக்கும் இஸ்ரேலியபயிற்சி உத்தியோகத்தரே என கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியீட்டுள்ளது.

இவரது மாதாந்துச் சம்பளம் 40 000 அமெரிக்க

## சின்னஞ் சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

பாவனையில் உள்ள நல்ல குளிர்சாதனப் பெட்டி விற்பனைக்கு உண்டு. த. துரைராசா, 100/2, அரசடி றோட், கந்தர்மடம்.

### சேவைகள்

பிறந்த நாள் வாழ்த்து, மரண அறிவித்தல், விவாக பூப்புனித நீராட்டு சபீண்டிகரண அழைப்புக்கள், திறப்பு விழாக்கள், கோயில் மலர் வெளியீடு ஏனைய விளம்பரங்கள் அத்துடன் ஏனைய சகல சேவைகளும் கமிஷன் அடிப்படையில் செய்து கொடுக்கப்படும். செ. அருளம்பலம், அருள் மல்ரி சேவிசெஸ், கல்வயல், சாவகச்சேரி.

### மணமகன் தேவை

கொழும்பில் வேலைசெய்யும் 28 வயதான அழகான க. பொ. த. (உ. த) வரை படித்தபெண்ணுக்கு கொழும்பில் வேலை செய்யும் மணமகன் தேவை. செவ்வாய் குற்றம் இல்லை விளம்பர இல. 63 ''சூரியகாந்தி'' ராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம்.

### பால் பசு தேவை

நல்ல இன பால்பசுதேவை. தற்போது பால் தரும் நிலையில் இருக்க வேண்டும். விளம்பரதாரர் 138, இராசாவின் தோட்டம் றோட், யாழ்ப்பாணம்.

### ஆங்கிலப் பயிற்சி நூல்

இலகு நடையில் பேச்சு ஆங்கில புத்தகங்கள் எழுதக் கூடியவர் தேவை பரணன் அசோசியேட்ஸ் 81 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### தொகையாகப் பெற்றுக்கொள்ள

சுப்பர்மக்ஸ்பிளேட், ஃபிலிம் றோல், எவரெடி பற்றறி, லெட் பென்சில்கள், பொக்ஸி பேனாக்கள். பரணன் அசோசியேட்ஸ், 81, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### விளம்பரம் செய்ய

''சூரிய காந்தி''யில் விளம்பரம் செய்ய எம்மை அணுகுங்கள். பரணன் அசோசியேட்ஸ், 81, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம.

### தவறிவிட்டது

சுணேசன் யசோதை ஆகிய நான் 12-1-98 அன்று பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம நோக்கிவந்த கடைசி நேர மினி பஸ்ஸில் பிரயாணம்செய்த போது ஒரு பேஸ் சுடன் தேசிய அ. அட்டை விசேட அடையாள அட்டை தொழில் அட்டை என்பன தவறிவிட்டது. தயவு செய்து கண்டு எடுத்தவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையின் 5ம் வாட்டில் ஒப்படைக்கவும்

12/5, வைமன் வீதி, யாழ்ப்பாணம் நித்தியானந்தன் ஜெயதர்சினி என்பவருடைய விசேட அடையாள அட்டை நல்லூர் பிரதேசத்திற்கிடையில் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து 68/1, இராசாவின தோட்ட வீதியில் உள்ள ''சூரிய காந்தி'' பணிமனையில் ஒப்படைக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

# பண்ணிசைப் போட்டி முடிவுகள் வெளியாகின

யாழ கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளிற்கிடையே யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழுவினால் யாழ்நகரம் மற்றும் வலிகாமப் பகுதிகளில் நடாத்தப்பட்ட பண்ணிசைப் போட்டியின் முடிவுகள் வெளியாகியுள்ளது. தெரிவு செய்யப்பட்டவர்களிற்கான இறுதிப் போட்டி தென்மராட்சிப்பகுதியிலும் வெற்றியீட்டிய மாணவர்களுடனுமாக எதிர்வரும் 21-02-98ம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு யாழ்/ இந்துமகளிர் கல்லூரியில் நடைபெறுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளுக்கு இடையே யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினால் வலிகாமத்தில் 08.02.98 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடாத்தப்பட்ட முதன் நிலைப் பண்ணிசைப் போட்டிகளில் பங்குபற்றி முதல் 5 இடங்களைப் பெற்றோர் விபரம்.

### வலிகாமம்

கீழ்ப்பிரிவு - ஆண்கள்.

1 ஆம் இடம் - செல்வன் சத்தியமூர்த்தி லக்மன், 2 ஆம் இடம் செல்வன் பேதுறுப்பிள்ளை அஜந்தன், 3 ஆம் இடம் - செல்வன் மகேந்திரன் திருவரங்கன், 4 ஆம் இடம்- செல்வன் தேவராஜா நிரோஷ், 5 ஆம் இடம் - செல்வன் இராசேந்திரம் பரத்துவாசன்.

கீழ்ப்பிரிவு - பெண்கள்

1 ஆம் இடம் - செல்வி ஈஸ்வரி தெய்வமனோகர், 2ஆம் இடம் - செல்வி டஷிகா தேவராஜா, 3ஆம் இடம் செல்வி ஜெயப்பிரியா ஜெயநாதன், 4ஆம் இடம் - செல்வி சுபாஷினி கருனாநிதி, 5ஆம் இடம் -செல்வி நளாயினி விக்னேஸ்வரன்.

மேற்பிரிவு - ஆண்கள்

1ஆம் இடம் - செல்வன் பாலகுமார தயாபரன், 2ஆம் இடம் - செல்வன் சிவசண்முகமூர்த்தி சிவசங்கரன், 3ஆம் இடம் - செல்வன் சேனாதிராஜா சுதாகர், 4 ஆம் இடம் செல்வன் தர்மலிங்கம் மயூரன், 5ஆம் இடம்- செல்வன் இராசலிங்கம் பிரவு.

மேற்பிரிவு - பெண்கள்

1ஆம் இடம்-செல்விவேணி குணராஜசிங்கம், 2ஆம்இடம் -செல்வி ஜனனி கேதீஸ்வரன், 3ஆம் இடம்- செல்வி தமிழினி தங்கவடிவேல், 4ஆம் இடம் -செல்வி கலைவதனி ஸ்ரீஸ்கந்தராஜா, 5ஆம் இடம்- செல்வி கிருஷ்ணவாணி கனேசலிங்கம்.

அதிமேற்பிரிவு - பெண்கள்

1ம் இடம் - செல்வி தர்ஷினி லேஸ்தீஸ்வரன், யா/ 2 ம் இடம் - செல்வி சிவரஞ்ஜனி சிவயண்முகமூர்த்தி, யா/3 ம் டம் - செல்வி பிரியந்தி தில்லையம்பல யா/ 4 ம் இடம் - செல்வி நிமலா ஆனந்தராசா, யா/ 5 ம் இடம் - மேனகா சண்முகநாதன், யா/

### யாழ் நகரம்

யாழ், கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளுக்கு இடையே யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினால் யாழ்ப்பாணத்தில் 07-02-98ம் திகதி சனிக்கிழமை நடாத்தப்பட்ட முதன் நிலை பண்ணிசைப் போட்டிகளின் பங்குபற்றி முதல் 5 இடங்களைப் பெற்றோர் விபரம்

கீழ்பிரிவு - ஆண்கள்

1ஆம் இடம் - செல்வன் அழகேசன அமிர்தலோஜன், 2ஆம் இடம் - செல்வன் கதிரேசபிள்ளை தர்ஸணன், 3ஆம் இடம் - செல்வன் கமலநாதன் தேசிகன், 4ஆம்இடம் - செல்வன் பாலசுப்பிரமணியக் குருக்கள் ரவிசங்கரசர்மா 5ஆம் இடம் - செல்வன் செல்வநாயகம் சிவசங்கர்.

கிழ்பிரிவு - பெண்கள்

1ஆம் இடம் - செல்வி ஸ்வஸ்திகா ரஞ்சன், 2ஆம் இடம் செல்வி தாரணி ஸ்ரீபாலச்சந்திரன், 3ஆம் இடம் - தக்ஷி இராஜேந்திரம், 4ஆம் இடம் - செல்வி தர்சிலா சிவஞானசேகரம், 5ஆம்இடம் செல்வி வரணி தியாகராஜா.

மேற்பிரிவு - ஆண்கள்

1 ஆம் இடம் - செல்வன் நவரத்தினம் பரந்தாமன். 2 ஆம் இடம் - செல்வன் ரஞ்சன் கஜானன். 3 ஆம் இடம் - செல்வன் திருமலை ஸ்ரீ சந்திரமௌலீகரசர்மா. 4 ஆம் இடம் - செல்வன் சிவகுமாரன் கஜவதனன். 5 ஆம் இடம் - செல்வன் மகேஸ்வரன் விஜயரூபன்.

மேற்பிரிவு - பெண்கள்

1 ஆம் இடம் - செல்வி தாரணி ரஞ்சன். 2 ஆம் இடம் - செல்வி கஜந்தினி சண்முகசுந்தரம். 3 ஆம் இடம் - செல்வி மதுரா கணேசலிங்கம். 4 ஆம் இடம்- செல்வி தனசொரூபி நவரெத்தினம். 5 ஆம் இடம் - செல்வி நந்தினி கணேசதாசன், செல்விஆரணி நல்லைநாதன்.

## ஊழியர்களுக்கு கூடுதலான நன்மைகள்

ஊழியர் சேமலாப நிதியத்தின் ஊடாக ஊழியர்களுக்கு கூடுதலான நன்மைகளை வழங்கும் விஷேட திட்டம் ஒன்று விரைவில் ஆரம்பிக்கப்பட இருக்கிறது என்று தொழில் அமைச்சர் செனிவிரட்ன தெரிவித்துள்ளார்.

பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதே சமாநாட்டு மண்டபத்திலே கடந்த ஞாயிற்றுகிழமை செய்தியாளர் மாநாட்டின் போது அமைச்சர் இதனை தெரிவித்தார்.

மேலும் அவர் ஊழியர்களுக்கு குறைந்த வட்டியில் வீடமைப்பு கடன்களை வழங்கும் திட்டம் குறித்து ஆராயப்பட்டு வருவதாகவும் கூறினார்.

## ஆசிரிய நியமனங்கள்

1996 ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டிப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் 10,000 ஆசிரியர்களை புதிதாக சேர்த்துக் கொள்ளப் போவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

பிரதேச செயலக மட்டத்தில் அவ் ஆசிரியர்கள் சேர்த்துக் கொளளப்படுவார்கள் இதில் சிங்கள மொழிக்கு 6000 பேரும் தமிழ் மொழிக்கு 4 000 பேரும் தெரிவு செய்யப்படுவார்கள்.

சில பிரதேச செயலக பிரிவுகளில் நிலவும் ஆசிரிய பற்றாக்குறையை நீக்கும் பொருட்டு ஏற்கனவே ஆட்சேர்ப்பு ஆரம்பமாகியுள்ளதும். குறிப்பிடத்தக்கதாகும்.

## தேசிய பாடசாலைக்கு மின்சாரம் இல்லை

தேசிய பாடசாலைகளில் ஒன்றான யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் பகல் வேளைகளில் மின்சாரம் இல்லை, இதன் காரணமாக கணனிப் பொறி, தண்ணீர் இறைக்கும் மோட்டார், விஞ்ஞான ஆய்வுகூட சேவைகள், ஒலி பெருக்கிச் சாதனங்கள், மின்மணி என்பன பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளன.

# சுவீடிஸ் நாட்டுத் தூதுவர் இன்று யாழ். விஜயம்

மூன்று நாள விஜயமொன்றை மேற்கொண்டு சுவீடிஸ் நாட்டுத் தூதுவர் இன்று யாழ். வருகை தருகின்றார். தற்போது நிலவும் சூழல் மற்றும் எதிர்கால அபிவிருத்திகளிற்கான சுவீடிஸ் நாட்டு உதவிகள்பற்றி பல்வேறு தரத்தினருடனும் கலந்துரையாடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனிடையே இன்று பிற்பகல் 2 மணியளவில் யாழ். செயலகத்தில் திணைக்களங்களின் தலைவர்களுக்கான கலந்துரையாடலிலும் அவர் பங்கேற்பார் என்றும் தெரிய வருகின்றது. 17, 18, 19-ம் திகதிகளில் இங்கு தங்கியிருந்து இறுதிநாள் கொழும்பு பயணமாவார் எனச் செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## திசைகோள் பயிற்சி நெறி பூர்த்தி

யாழ். இந்துக்கல்லூரி, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, மற்றும் வட இந்து மகளிர் கல்லூரி பருத்தித்துறை ஆகிய நிலையங்களில் '' திசைகோட் பயிற்சியில் '' ஈடுபட்டுள்ள ஆரம்பக் கல்விக்குப் புதிதாக நியமிக்கப் பட்டிருக்கும் ஆசிரியர்கள் தமது பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்து 23-2-98 தொடக்கம் பாடசாலைகளில் கடமையாற்ற வருகை தருகின்றனர்.

(சி-1)

### மாணவர் வாசகர் பாதிப்பு

சாவகச்சேரி பிரதேச சபையின் மிருசுவில் உப அலுவலகத்தின் கீழ் இயங்கும் பொது சன நூலகம் நிரந்தர பயிற்சி பெற்ற தகைமையுடைய நூலகப் பொறுப்பாளர் இன்றி அதன் சேவை தடைப்பட்டுள்ளது.

## சிந்தனைக்கு!

### 'குமுதம்' 'அரசு'

ஆத்திகனுக்கும் நாத்திகனுக்கும் உள்ள வேறுபாடு என்ன?

ஆத்திகன் கோபுரத்தை நோக்குகின்றான். நாத்திகன் சாக்கடையைப்பார்க்கிறான். கசப்பினூடும் இனிப்பைச் சுவைக்கின்றான் அவன் இனிப்பினூடும் கசப்பைக் காண்கிறான் இவன். நடப்பதெல்லாம் நன்மைக்கே என்று நினைப்பான் அவன். அத்தனையும் தகிடு தத்தம் என்பான் இவன். அவன் லட்சிய வாதி, இவன் காரியவாதி, அவன் சாது; கடவுள் இருக்கிறார் என்று சத்தமாகச் சொன்னால் சமாதானம் குலைந்து விடுமோ என்று வாயை மூடிக்கொண்டு இருப்பான். இவன் சண்டைப் பிரியன். சும்மா இருந்தாலும் வம்புக்கு இழுப்பான்.

### வாரியார் சுவாமிகள்

இன்னும் சில இந்துக் கோவில்களில் சட்டை போடாமல்தான் போகவேண்டும் என்று உள்ளதே. காலத்திற்கு ஏற்ப நாமும் இப்படிப் பழைய வழிமுறைகளை மாற்றுவது நல்லதல்லவா?

இறைவனை வணங்கும் போது சட்டையும் மேலாடையும் இருப்பது பணிவைத் தெரிவிக்காது. பழைய வழி முறைகளை மாற்றுவது என்பது உகந்தது ஆகாது.

'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே' என்பது நன்னூல் சூத்திரம். இதில் கழிதல் என்பது தன்வினை. காலத்தால் சில நெறிகள் தாமே மாறுபடும். நாமே மாற்றக்கூடாது.

வயது முதிர முதிர தலை மயிர் தாமே உதிரவேண்டுமே யன்றி நாமே பிடுங்கி எறியக் கூடாது.

### சிந்தனைக்கு ஒரு சிறு தகவல்

## புத்தகத்தைப் படிக்கப் போகிறவர் யார்?

''டேவிட்''

ஹாஸித் என்ற யூத மகான் ஒரு புரட்சிகரமான புத்தகம் எழுதினார்.

தனது சீடர் ஒருவரிடம் ஒரு பிரதியைத் தந்து, ''தெய்வ பக்தி மிகுந்தவரான ஒரு யூதரிடம் கொடுத்து என்ன நடக்கிறதென்று கவனித்து வா'' என்றார்.

சீடர் ஒரு யூதப் பாதிரியாரைப் பார்த்து அவரிடம் அதைக் கொடுத்தார்.

அது ஹாஸித் எழுதிய புத்தகம் என்றதுமே பாதிரியாருக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்துவிட்டது.

புத்தகத்தைத் தோட்டத்தில் வீசி எறிந்தார்.

அவர் மனைவி, ''இப்படிக் கோபப்படலாமா? உங்களிடம் ஆயிரக்கணக்கான புத்தகங்கள் இருக்கின்றனவே. அவற்றோடு இதுவும் இருந்து விட்டுப் போகக் கூடாதா? இவர் மனதைப் புண்படுத்தி விட்டீர்களே!'' என்றாள்.

சீடர் ஹாஸித்திடம் திரும்பிவந்து நடந்ததை விபரித்து விட்டு, ''முதலில் பாதியார் நமது எதிரி போலவும், அவர் மனைவி நமக்கு வேண்டியவள் போலவும் தோன்றினார்கள். யோசிக்கும் போது உண்மை அதற்கு நேர்மாறாக இருக்கும் போலிருக்கிறதே!'' என்றார்.

''எப்படி?'' என்று கேட்டார் ஹாஸித்.

சீடர் ''பாதிரியாரின் கோபம் அடங்கியதும் அவர் மனம் வருந்திப் புத்தகத்தை எடுத்துப் படிக்க வாய்ப்புண்டு! அவர் மனைவியோ ஆயிரக்கணக்கான புத்தகங்களோடு இதையும் வைத்து விட்டுத் திரும்பியே பார்த்திருக்க மாட்டாள்! ''என்றார்.

சின்ன



துரை

## மார்பில் ஏறும் மெடல்கள்

சோல்ஜர்கள் ஆயிரமாய் உயிர்போக ஜெனரல் மார்பில் மெடல் டாலடிக்க ஏறும்.

# சூரியகாந்தி

## நிதியை விட நீதியே முக்கியம்

தமிழ் நாட்டிலுள்ள கோயம்புத்தூர் ஓர் அருமையான நகரம். நிறைய தொழில்கள் செழித்து வளரும் இடம். பல தொழிற்சாலைகளும் நிறைய தொழிலாளர் குடியிருப்புகளும் உள்ள இடம்.

இரண்டு தினங்களுக்கு முன்னால் இங்கேதான் தொடர்ச்சியாக பல இடங்களில் குண்டுகள் வெடித்து இருக்கின்றன.

செத்துப் போனவர்களும் காயம் அடைந்தவர்களும் பலர்.

இந்தியத் தேர்தல்களை குழப்பும் நோக்குடன்தான் இந்தக் குண்டு வெடிப்புக்கள் இடம் பெற்றுள்ளன என்பதில் சந்தேகம் இல்லை.

பாகிஸ்தானின் உளவுப் படை இந்தியாவுக்குள் நிறையவே ஊடுருவி இருக்கிறது.

முன்னரும் கோயம்புத்தூரில் குண்டு வெடித்தது. அதற்கு முன்னால் பம்பாயிலும் குண்டு வெடித்தது.

பம்பாய் குண்டு வெடிப்புக்கும் சர்வதேச கடத்தல் மன்னர்களுக்கும் தொடர்பு இருந்தது கண்டுபிடிக்கப் பட்டது.

இந்தக் கடத்தல் மன்னர்களுக்கு உலகம் முழுவதிலும் தொடர்பு இருக்கிறது.

''முஸ்லிம் அடிப்படை வாதம்'' பல நாடுகளில் தனது கைவரிசையைக் காட்டி வருகிறது.

அரபு நாடுகளில் எண்ணெய் வர்த்தகத்தின் மூலம் செழிக்கும் பணம் முஸ்லிம் பயங்கரவாதத்தை வளர்ப்பதில் வெள்ளமாய் பாய்கிறது.

முஸ்லிம் அடிப்படை வாதம் வளர்ச்சி அடைவதற்கு அமெரிக்காவும் மற்றும் மேற்குலக நாடுகளும் முன்னர் நிறையவே உதவி செய்திருக்கின்றன.

சோவியத் நாட்டில் கம்யூனிஸம் புகழோடு இருந்த நேரத்தில் மத அடிப்படை வாதத்துக்கான வித்து விதைக்கப் பட்டது.

வித்தை விதைத்ததில் அமெரிக்காவுக்கு கணிசமான பங்கு உண்டு.

தன்னுடைய மேலாதிக்கத்தை உலகம் முழுவதும் நிலை நாட்டுவதற்காக அமெரிக்கா பல ''அண்டர் கிரவுண்ட்'' கைங்கரியங்களை செய்து வந்திருக்கிறது.

தனது பலத்தை பேணுவதற்காக பலம் குறைந்தவன் பலத்தை கூட்டுவதும் பலம் கூடியவனின் பலத்தை குறைப்பதும் அமெரிக்க ஆட்சியாளரின் ''அதிபுத்தி சாலித்தனமான'' அரசியல் சித்தாந்தம்.

பாகிஸ்தான் எப்போதும் அமெரிக்காவின் செல்லப் பிள்ளையாகத்தான் இருந்து வந்திருக்கிறது.

செல்லப்பிள்ளையின் துட்டத்தனங்களை அமெரிக்கா கண்டும் காணாதது போல இருந்துவிடுவதே வழக்கம்.

நிதிதான் இப்போது அரசியலில் முக்கிய பாத்திரம் வகிக்கிறது.

இந்த நிலை இருக்குமட்டும் குண்டுவெடிப்புகள் இருந்து கொண்டுதான் இருக்கும்.

நிதியைவிட நீதிதான் அரசியலில் முக்கியத்துவம் பெற வேண்டும்.

'நீதி' யை அடிப்படையாகக் கொண்ட அரசியல் உலகம் முழுவதும் ஏற்படும்போதுதான் அமைதியான, சந்தோஷமான வாழ்வு ஏற்பட முடியும்.

உலக அரசியலில் மட்டுமன்றி நமது சொந்த வாழ்க்கையிலேயும் கூட நிதியை விட நீதிக்குத்தான் நாம் முதலிடம் கொடுக்க வேண்டும்.

வளமான, அமைதியான, வளர்ச்சியான வாழ்வுக்கு அது ஒன்றேதான் பாதை.

## வடக்கில் பணியாற்றும் பொலிஸாரின் அதிருப்தி

வடக்குக் கிழக்கு மாகாணத்தில் கடமை புரிந்து வருகின்ற பொலீஸ் உத்தியோகஸ்தர்கள் பலர் மிகவும் அதிருப்தி அடைந்தவர்களாக இருக்கின்றனர்.

பலருக்கு வாக்குறுதி தரப் பட்ட பதவி உயர்வோ, உத்தியோக உயர்வோ இன்னமும் கிடைக்கவில்லை.

இரவு பகல் தொடர்ந்து கடமை செய்ய நேர்வதோடு சொந்த ஊர்களுக்குச் சென்று வர லீவு கிடைப்பதும் கஷ்ரமாக இருக்கிறது.

இவர்களில் பலருக்கு வாக்குறுதி அளிக்கப்பட்ட விசேட கொடுப்பனவுகளும் இன்னமும் வழங்கப்படவில்லை.

அதிருப்தி அடைந்துள்ள இவர்களில் பலர் தங்களது பரிதாப நிலையை தங்களது மேலிடத்தின் கவனத்துக்கு கொண்டுவந்துள்ளனர்.

## சமாசத்தின் விநியோகம் கூ. சங்கங்களுக்குப்போதாது

யாழ் மாவட்ட கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தினால் பலநோக்குக்கூட்டுறவுச்சங்கங்களுக்குவழங்கப்படும்பொருட்கள் தமது சங்க நுகர்வோரின் தேவைக்குப் போதாமலிருப்பதாக பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்கள் தெரிவித்துள்ளனர்.

சமாசத்தினால் வழங்கப் படும் பொருட்கள் யானைப் பசிக்குச் சோளப்பொரி என்ற அளவிலேயே வழங்கப்படுவதாக பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தலைவர் ஒருவர் தெரிவித்தார். இதனால் தாம் தமது தேவையைப் பூர்த்தி செய்வதற்காக தனியார் வர்த்தகர்களிடமிருந்து கூடுதல் விலைக்கு பொருட்களைப் பெற்றுக்கொள்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அரிசி போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் சமாசத்தினால் வழங்கப்படும் விலையை விட தனியார் வர்த்தகர்களிடம் மலிவாகப் பெற்றுக் கொள்ளக் கூடியதாயிருப்பதாகவும் பல நோக்குக்கூட்டுறவுச் சங்கத்தலைவர் ஒருவர் தெரிவித்தார்.

### ஒய்வூதிய தேதிகள்

ஒய்வூதியம் பெறுபவர்களின் 98ம் வருடத்திற்கான ஒய்வூதியக்கொடுப்பனவு பின்வரும் திகதிகளில் வழங்கப் படுமென்று ஒய்வூதியத் திணைக்களப் பணிப்பாளரினால் சகல திணைக்களத் தலைவர் செயலாளர்கள் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய ஜனவரி 08, பெப்ரவரி 12, மார்ச் 10, ஏப்பிரல் 06, மே 07, யூன் 11, யூலை 14, ஒகஸ்ட் 11, செப்டெம்பர் 10, ஒக்டோபர் 13, நவம்பர் 12, டிசம்பர் 10, என குறிப்பிடப்பட்டுள்ளது.

### நிர்வாக சபைக் கூட்டம்

15 - 02 - 98 ஞாயிற்றுக்கிழமை யாழ் மத்திய கல்லூரியில் நடைபெற்ற யாழ் மாவட்ட கிரிக்கட் மத்தியஸ்தர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் பின்வருவோர் செயற்குழு உறுப்பினர்களாக தெரிவு செய்யப் பட்டனர். தலைவர் க. நந்தகுமார் செயலாளர் என் இரவீந்திரன் பொருளாளர் எஸ் முருகவேள் கணக்காய்வாளர் என்.வித்தியாதரன்.

### மாணவர்களுக்கு பாராட்டு

5ம் ஆண்டு புலமைப் பரிசில்பரீட்சையில் சித்தியடந்த நவாலி சென் பீற்றேஸ் றோ.க.த.க. பாடசாலையைச் சேர்ந்த மாணவர்ளான இ. போல்றஜீவன் க. தினேஸ் க. சிந்துஜா. அ. கோகுல ரமணன். ஆகியோரைப் பாராட்டி நவாலி ஊன்றுகோல் அறப் பணியகம் அவர்களின் கல்வி வசதிக்காக தலா 500 ரூபா வீதம் ஒவ்வொருவருக்கும் வழங்கியுள்ளது.

### அரச ஊழியர் சம்பள திகதி

அரசாங்க ஊழியர்களுக்கான 98ம் ஆண்டுக்குரிய சம்பளக் கொடுப்பனவு பின்வரும் திகதிகளில் ஒவ்வொரு மாதமும் வழங்கப்படுமென்று பொதுத்திறைசேரியினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் ஜனவரி 22, பெப்ரவரி 24, மார்ச் 25, ஏப்பிரல் 09, மே 21, யூன் 25, யூலை23, ஒகஸ்ட் 25, செப்டம்பர் 24, ஒக்டோபர் 23, நவம்பர்25, டிசம்பர் 23, இது சம்பந்தமான சுற்று நிருபமொன்று சகல திணைக்களத் தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

### ஊர்காவற்படை வீரர் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் ஊர் காவற்படையைச் சேர்ந்த வீரரொருவர் விடுதலைப்புலிகளின் தாக்குதலால் கொல்லப் பட்டுள்ளார். நேற்று மட்டக்களப்பு வெல்லா வெளிப்பகுதியில் காவல் கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சமயம் புலிகள் நடத்திய தாக்குதலிலேயே இவர் கொல்லப்பட்டார்.

### மானிப்பாயில் சீமெந்து

மானிப்பாய் ப. நோ. கூ. சங்கம் அதன் கிளைகள் ஊடாக100ரூபா அங்கத்துவப் பணம் செலுத்திய அங்கத்தவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் 2 பைக்கற் சீமெந்து வீதம் தற்போது கட்டுப்பாட்டு விலையில் வழங்கி வருகின்றது.

'பிரபலஸ்தர்'கள் எழுதிய புத்தக வரிசையில் புதிதாக ஒன்று வந்திருக்கிறது.

## 'டிக்ஸிற்' எழுதிய புத்தகம்

''மீரா''

இந்தியாவில் 'பிரபலஸ்தர்'கள் எழுதும் புத்தகங்களை வெளியிடுவது ஒரு பெரிய 'தொழில்' ஆகிவிட்டது.

நல்ல லாபம் தரும்தொழில் புத்தகத்தில் கொஞ்சம் பரபரப்பான சங்கதிகள் இருந்துவிட்டால் வெளிவந்த உடனேயே புத்தகம் முழுவதும் விற்றுத் தீர்ந்து விடுகிறது.

மறு பதிப்புகளும் பலவெளிவந்து உடனேயே விற்பனையாகிவிடுகின்றன.

அநேகமாக இந்த மாதிரியான புத்தகங்கள் ஆங்கிலத்தில்தான் வெளிவருகின்றன புத்தக விற்பனை அமோகமாக நடந்தால், அவை பிராந்திய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்படுகின்றன

காசுகிடைக்கிறது, பரபரப்பு உண்டாகிறது. பென்ஷனாகிப்போய் கவனிப்பார் இல்லாமல் ஒதுக்கப்பட்டிருக்கும் மாஜி பிரபலங்களின் 'ஈகோ' வைத் திருப்திப் படுத்தக் கூடிய முறையில் பத்திரிகைகளில் பெயரும் அடிபடுகிறது.

முன்னாள் கிரிக்கெட் வீரர்கள், பென்ஷனாகிவிட்ட பெரிய அதிகாரிகள், ராஜாங்கத் தூதுவர்கள், தொழில் அதிபர்கள், மாஜி ராணுவ தளபதிகள் எல்லாரும் இந்த வேலையைச் செய்கிறார்கள்.

இப்படியானவர்களுக்கு உதவி செய்வதற்கென்றே சில சில கூலி எழுத்தாளர்களும் இருக்கிறார்கள்.

சிலர் தங்கள் கதைகளைச் சொல்ல, அதை ஒலி நாடாவில் பதிவு செய்து, பின்னர் வாலும் தலையும் ஒட்ட வைத்து, ரசிக்கக் கூடிய சம்பவங்களைக் கோவையாக்கி புத்தகம் தயார் பண்ணித் தருகின்ற 'உதவி' யாளர்களும் இருக்கிறார்கள்.

சிலர் சொந்தமாகவே எழுதவும் செய்வது உண்மைதான்!

இலங்கையில் இந்தியராணுவம் இருந்தபோது அதன் தளபதியாக இருந்த கல்கட் ஒரு புத்தகம்எழுதியிருந்தார். நல்ல விற்பனை.

இந்தியாவின் தலைமைத் தேர்தல்ஆணையாளராகஇருந்தசேஷன்ஒரு புத்தகம் எழுதியிருந்தார். அதில் திராவிட இயங்கங்களைப் பற்றியும் அண்ணாவைப் பற்றியும் அவர் குறிப்பிட்டிருந்த பகுதிகள் பெரிய சர்ச்சையை கிளப்பிவிட்டிருந்தன இச்சர்ச்சை காரணமாகவே புத்தகம் அமோகவிற்பனை.

இந்தியாவின் ஜனாதிபதியாக இருந்த வெங்கட்ராமனும் இதற்கு விதி விலக்கு அல்ல இந்தப் புத்தகத்தில் ராஜீவ் காந்தி பற்றி அவர் குறிப்பிட்டிருந்த சில விஷயங்கள் பெரிய சர்ச்சையை உண்டாக்கின.

இப்போது இந்த வரிசையில்-

கொழும்பில் இந்திய தூதுவராக இருந்து இப்போது ஓய்வு பெற்றிருக்கும் டிக்ஸிற் எழுதிய 'அசைன்மென்ற் கொழும்பு' என்ற புத்தகம் வந்திருக்கிறது.

இதில்-

ஜே.ஆர். பற்றியும், ராஜீவ் பற்றியும், புலிகளைப் பற்றியும் நிறைய விஷயங்களை குறிப்பிட்டு இருக்கிறார்.

'ஜே. ஆர் ராணுவத் தீர்வையே முற்று முழுதாக விரும்பினார். அவர் அப்படிச் செய்வாரேயானால், இந்தியா தனது முழுமையான வலிமையுடன் தமிழ்ப் போராளிகள் பக்கம் சாய்வது தவிர்க்க முடியாதது ஆகிவிடும் என்று மிரட்டப்பட்ட பின்னரே ஒப்பந்தத்துக்கு இணங்கினார்'' என்றும் குறிப்பிட்டு உள்ளார்.

# 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி 'தினத்தந்தி' ஆதித்தன் 'குமுதம்' அண்ணாமலை சாதனை செய்த பத்திரிகையாளர்!

-சுகுமாரன்-

(நேற்றைய தொடர்ச்சி)

### சினிமா மீது அளவுக்கு மீறிய மோகம்

காதல், வீரம் போன்ற உணர்வுகளை, நடைமுறை வாழ்வினின்றும் விலக்கி, கிளுகிளுப்பும் வெறியும் ஊட்டக் கூடிய முறையில் காட்டியது.

மக்கள் தமது அன்றாடப் பிரச்சினைகளிலிருந்து விடுவித்துக் கொள்கிற வழியாக சினிமா காட்டிய கற்பனை இருந்தது. இந்த வழி மலிவானதாகவும் இருந்தது. அவர்களுடைய சிந்தனைக்கு வேலை கொடுக்காததாகவும் இருந்தது.

அடைபட்ட இருட்டிலிருந்து சினிமா பார்த்தவன், தன்னையே கதாநாயகனாகக் கற்பனை செய்து, மேக்கப் போட்ட சினிமா நடிகையுடன் மூன்று மணி நேரம் காதல் செய்தான்!

சினிமா பலருக்கு போதைப் பொருளாக மாறியது.

சினிமா நட்சத்திரங்கள் ஏதோ மிகவும் நெருக்கமானவர்கள் போல ஆனார்கள்.

அவர்களைப் பற்றி அறிய ஆசை பிறந்தது.

இந்த ஆசையை 'தினத்தந்தி'யும் 'குமுத'மும் நன்கு தீர்த்தன!

'தினத்தந்தி' யிலும் கவர்ச்சிப் படங்கள் நிறைய வெளிவந்தன.

இந்த வாசகர்களுக்கு - அதிகம் படிப்பறிவு இல்லாத வாசகர்களுக்கு புரிந்து கொள்ளக் கூடிய முறையிலேயே 'தினத்தந்தி' செய்திகளை வெளியிட்டது.

எழுத்துக் கூட்டி வாசிக்கத் தெரிந்தவர்கள்கூட புரிந்து கொள்ளக் கூடிய நடையில் ஆதித்தன் செய்திகளை வெளியிட்டார்.

### மக்கள் தமிழில் செய்திகள்

புலவர் கையில் இருந்த தமிழை கல்கி எளிய தமிழ் ஆக்கினார். ஆதித்தன் அதனை மக்கள் தமிழ் ஆக்கினார்.

'புள்' என்று புலவர்கள் எழுதியதை கல்கி 'பறவை' என்று எழுதினார். ஆதித்தன் அதனை 'குருவி' என்று எழுதினார்.

இன்று 'தினத்தந்தி'க்கு சென்னையில் பிரமாண்டமான தலைமை அலுவலகம் இருக்கிறது.

சொந்தத்தில் காகித ஆலை இருக்கிறது.

ஆனால் 'தந்தி' தொடங்கியபோது காகிதம் கிடைக்காமல் வைக்கோலை அரைத்து கைக்காகிதம் செய்து அதில் பத்திரிகையை ஆதித்தன் அச்சிட்டார் என்பதுதான் ரசமான சங்கதி!

இந்திய மொழிப் பத்திரிகைகளிலேயே அதிகம் விற்பனையாகும் நாளிதழ் என்ற பெருமையை கடந்த பல ஆண்டுகளாக 'தினத்தந்தி' நிலை நிறுக்தி வருகிறது! சாதனைதான்!

படித்தவர் படிக்காதவர், ஏழை பணக்காரன், தொழிலாளி முதலாளி, ஆண் பெண், கல்லூரி மாணவர்கள், பாடசாலைச் சிறுவர்கள், எல்லாரையும் பத்திரிகை படிக்க வைத்தது 'தினத்தந்தி'!

கை வண்டி இழுக்கிறவர்களும், ரிக்ஷா இழுக்கிறவர்களும், மிக ஏழைத் தொழிலாளர்களும் காலையில் எழுந்ததும் 'தினத்தந்தி' படிக்கிறார்கள்!

எந்தச் செய்தியாக இருந்தாலும் ஏதோ நேரே பார்த்தது மாதிரி 'தினத்தந்தி' செய்திகளை வெளியிடுகிறது.

சின்னச் சின்ன வசனங்கள்! ஜனரஞ்சகமான செய்திகள்!

### மக்களையும் வளர்த்து தானும் வளர்ந்தது

மெல்ல, மெல்ல மக்களையும் வளர்த்து தானும் வளர்ந்தது. அதன் தமிழ் நடையிலும் மாற்றம் வந்தது. மக்களுக்கு எளிதாகப் புரியும் நல்ல தமிழ்ச் சொற்களை அறிமுகப் படுத்தியது.

''ஜனாதிபதி''யை 'குடியரசுத் தலைவர்' என்றது எலெக்ஷன்' என்பதை 'தேர்தல்' என்றது, 'ரி.வி'யை 'தொலைக்காட்சி' என்றது, 'ஸ்டாம்ப்' என்பதை 'தபால் தலை' என்றது, 'அசெம்பிளி'யை 'சட்டசபை' என்றது 'பார்லிமெண்ட்' என்பதை 'நாடாளுமன்றம்' என்றது!

தமிழ் நாட்டு நாளிதழ்களில் முன்னர் வடசொற்களும், ஆங்கிலச் சொற்களும் நிறைய இருக்கும்!

பல நல்ல தமிழ்ச் சொற்கள் தமிழ் நாட்டு மக்களிடையே பழக்கத்துக்கு வந்திருப்பதற்கு 'தினத்தந்தி' உதவி இருக்கிறது!

இந்து, எக்ஸ்பிரஸ், தினமணி, சுதேசமித்திரன் போன்ற நாளிதழ்களை ஒவ்வொரு நாளும் வாங்குபவர்கள் இரண்டாவது நாளிதழ் ஒன்றை வாங்க விரும்பிய போது 'தினத்தந்தி'யை வாங்கினர்கள்.

வாரப் பத்திரிகைகளில் 'ஆனந்தவிகடன்' அல்லது 'கல்கி' ஒழுங்காக ஒவ்வொரு கிழமையும் வாங்கியவர்கள் இரண்டாவதாக ஒரு வாரப் பத்திரிகை வாங்க விரும்பிய போது 'குமுதம்' வாங்கினார்கள்,

தரத்தில் இரண்டாம் இடத்தோடு திருப்திப் பட்டுக் கொண்ட இந்தப் பத்திரிகைகள் விற்பனையில் முதலாம் இடத்துக்கு வந்தன!

### பத்திரிகைத் தமிழ்நடை அவசர யுகத்தின் தேவை

தமிழ் வசன நடையிலும் இந்தப் பத்திரிகைகள் ஒரு மாற்றம் கொண்டு வந்தன.

இது அவசர யுகம்!

நிதானமான வர்ணனைகளுக்கு இன்று இடம் இல்லை!

கதை, கட்டுரைகளில்கூட இடம் இல்லை.

படிப்பவர்களுக்கு நேரமும் பொறுமையும் இல்லை.

பண்டிதர்களின் அலங்கார நடை உதவாது. தி.மு.க பாணி அடுக்கு மொழியும் எடுபடாது.

செய்திகளை 'பட்' டென்று சொல்லவேண்டும், சுருக்கமும் தெளிவும் அவசியம்!

'தினத்தந்தி'யும் 'குமுத'மும் இந்த விஷயத்தில் நிறைய அக்கறை காட்டின.

படித்தவுடன் புரிந்து கொள்கிற, சொல்ல வேண்டிய செய்தியை 'பளிச்' சென்று தொட்டுக்காட்டும் நடையை உருவாக்கின.

'குமுத'த்தில் வெளிவரும் சிறுகதைகள், தொடர்கதைகளில்கூட இந்த 'நடை' பின்பற்றப்பட்டது.

(தொடரும்)

---

இந்திய தேர்தல் களம்

# ஐக்கிய முன்னணி வென்றால் அடுத்த பிரதமர் மூப்பனார்!

இந்தியப் பாராளுமன்றம் கலைக்கப்பட்டவுடன், தேர்தல் களத்திற்கு ஆயத்தம் செய்யும் பணியில் அரசியல் கட்சிகள் இறங்கின.

ஒவ்வொரு கட்சியும் தம்மைப் பலப்படுத்திக் கொள்ள பிற கட்சிகளுடன் கூட்டுச் சேர்வதும் கட்சி விட்டுக் கட்சி பாய்வதும் பரவலாக நடந்தது. காங்கிரசின் சாதகபலன் 'சாதகமாக' இல்லை என்பதை ஊகித்த அக்கட்சிக் காறர்கள் பலர் பாரதீயஜனதாவிடம் அடைக்கலம் புகுந்தனர்.

இந்தியா சுதந்திரம் பெற்றவுடன் காங்கிரஸ் கட்சியை கலைத்துவிட வேண்டும் என்பது மகாத்மா காந்தி எடுத்த முடிவு. அன்று அது நிறைவேறாவிட்டாலும் அந்த நிலை இன்று காங்கிரசுக்கு வந்துவிடுமோ என்ற பயம் கேசரியை உலுப்பியது. கட்சியைப் பாதுகாக்க சோனியாவின் காலைப் பிடிப்பதைத் தவிர கேசரிக்கு வேறு வழி தெரியவில்லை.

### சோனியாவின் பிரவேசம்

அரசியலுக்குள் நுழைவதில்லை என்ற முடிவுடன் இருந்த சோனியா காந்தி புகுந்த குற்றத்திற்காகக் காங்கிரசைக் காப்பாற்றும் பணியில் இறங்கச் சம்மதித்தார். சோனியாவின் கட்சிப் பிரவேசத்துடன் காங்கிரசில் இருந்து கட்சி தாவும் நோய் கட்டுப் படுத்தப்பட்டது. அந்தளவில் கேசரிக்கு மனத்திருப்திதான்.

ஐக்கிய முன்னணிக்கு அளித்து வந்த ஆதரவை காங்கிரஸ் நீக்கியதன் மூலம் நடந்ததே இந்தத் தேர்தல் பிரசவம். அதன்பின் ஐக்கிய முன்னணி காங்கிரசுடன் கூட்டணி வைத்துக் கொள்வதை தவிர்த்துக் கொண்டது. ஆனாலும் தனது கூட்டமைபை குலையவிடாதுகட்டிக் காப்பதிலும் முன்னணிக்கு கருசனை இருந்தது.

### முன்னணியின் இராஜதந்திரம்.

ஐக்கிய முன்னணிக்குள் ஒற்றுமையை ஏற்படுத்த அவர்கள் கையாண்ட ஒரே வழி தேர்தலில் வெற்றியீட்டினால் யார் பிரதமர் என்பதை முன்கூட்டியே தெரிவிக்க மறுத்ததுதான்! குஜ்ராலை பிரதமராகக் கொண்டிருந்த முன்னணி அடுத்த பிரதமரும் குஜ்ரால்தான் என அறிவித்திருக்க வேண்டும். அதுதான் நியாயமும் கூட, ஆனால் அப்படி அறிவித்திருந்தால் கட்சியின் உடைவுக்கும் அதுவே காரணமாகியிருக்கும். இந்த நிலையில் தான், பிரதமர் யார் என்பதை அறிவிக்காமல் விடும் இராஜதந்திரத்தை முன்னணி கையாண்டது.

### ஜி. கே மூப்பனார் வெளியேறுவார்.

குஜ்ரால்தான் பிரதமர் என ஐக்கிய முன்னணி அறிவித்திருந்தால், ஏற்கனவே பிரதமர் பதவி கிடைக்காமல் ஆத்திரமுற்றிருக்கும் ஜி. கே. மூப்பனார் முதலில் தனது பரிவாரங்களுடன் வெளியேறியிருப்பார். இதனால் கூட்டணிஉடைந்துவிடும். அதுமட்டுமல்லாமல் தமிழ் நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் தமிழ் மாநிலக் காங்கிரசுக்கும் இடையிலான கூட்டும் குலைந்து விடும். இது கருணாநிதிக்கும் நன்றாகத் தெரியும். இரண்டு கட்சிகளினதும் கூட்டு முறிவடைந்தால் அதிமுக பொதுச் செயலாளர் செல்வி. ஜெயலலிதாவுக்குத்தான் கொண்டாட்டம். அதன் பின் திமுகவின் ஆட்சிக்கு அரை குறை ஆயுள் என்பது எல்லோரும் அறிந்ததே.

இதில் இருந்து தப்பித்துக் கொள்ள ஐக்கிய முன்னணியின் ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பது மிகவும் அவசியம்.

### பிரதம பதவியில் சம சந்தர்ப்பம்

ஐக்கிய முன்னணிக்கு நீண்ட ஆயுள் இருக்கவேண்டுமாயின். பிரதமர் பதவியிலும் சமசந்தர்ப்ப வாய்ப்பு வழங்க வேண்டும். அப்போதுதான் முன்னணி நிலைக்கும்.

அந்த வகையில் தேவகௌடாவுக்கும், குஜ்ராலுக்கும் பிரதமர் ஆசனத்தில் அமர சந்தர்ப்பம் வழங்கப்பட்டு விட்டது. அவர்களிடம் திறமை ஆளுமை இருந்தாலும், மேலும் சந்தர்ப்பம் வழங்கும் சக்தி முன்னணிக்கு அறவே இல்லை.

எனவே பிரதமர் ஆசனத்தில் அடுத்ததாக இருக்க வேண்டியவர் தமிழ் மாநிலக் காங்கிரசின் தலைவர் ஜி.கே. மூப்பனார் என்பதை யாரும் ஏற்றுக் கொள்வார்கள்.

மூப்பனாருக்கு பிரதமர் பதவி கிடைக்கத் தடையாக இருந்த தி.மு. கருணாநிதியும் விரும்பியோ, விரும்பாமலோ மூப்பனார் பிரதமராவதை ஆதரித்தாக வேண்டும்.

அதன் மூலமே தனக்குக் கிடைத்த பழியை, இந்தியா சுதந்திரம் பெற்று ஐம்பது ஆண்டுகளாகியும ஒரு தமிழன் பிரதமராக வில்லை என்ற தமிழ்நாட்டு மக்களின் உள்ளக் குமுறலை நீக்க முடியும்.

### தேர்தலின் முடிவில் தீர்ப்பு வரும்

எதிர் வரும் தேர்தலில் ஐக்கிய முன்னணி வெற்றியீட்டி-மூப்பனாருக்கு பிரதமர் பதவி கிடைக்காவிட்டால் முன்னணியில் இருந்து மூப்பனார் வெளியேறுவதை யாராலும் தடுக்க முடியாது.

இதை முன்னணியின் முக்கிய தலைவர்களான சந்திரபாபுநாயுடு, குஜ்ரால், தேவகௌடா போன்றோர் நன்கு அறிவர். அத்துடன் முன்னணி வெற்றி பெற்றாலும், மூப்பனார் வெளியேறினால் கிடைத்த வெற்றியால் எந்தப் பலனும் இல்லை என்பதையும் முன்னணித் தலைவர்கள் நன்கு உணர்வர்.

எனவே நடைபெறும் இந்தியத் தேர்தலில் ஐக்கிய முன்னணி வெற்றியீட்டினால் இந்தியாவின் பிரதமர் மூப்பனார் என்பதில் சந்தேகமில்லை.

"விதுரன்"

---

# சிறுவர் விபச்சாரம்

இன்று பெரும்பாலான நாடுகளில் தீய செயல்களில் ஒன்றான சிறுவர் விபச்சாரம் பரவலாக விரிவாக்கம் பெற்று சிறுவர் சமுதாயத்தைச் சீரழித்து வருகின்றது.

திறந்த பொருளாதாரக் கொள்கையினால் இலங்கைக்கு பெருமளவு வெளிநாட்டு சுற்றுப் பிரயாணிகள் வரத் தொடங்கினர் அதன் மூலம் கணிசமான வெளிநாட்டுச் செலாவணியம் வந்து குவிந்தது அதன் பின்னணியில் காலப்போக்கில் சிறுவர் விபச்சாரமும் இலங்கையில்- குறிப்பாக மேல்மாகாணத்தில் வேருன்றி ஏனைய இடங்களுக்கு பரவ ஆரம்பித்து விட்டது.

1994 இல் கொழும்பு பல்கலைக்கழக சமூகவியல் ஆய்வாளர் கலாநிதி எ.யே. வீரமுண்ட என்பவர் சிறுவர்களின் விபச்சாரக்காரணிகளையும், அதனைத் தடுப்பதற்குரிய சிபாரிசுகளையும் ஓர் ஆய்வாக வெளியிட்டு எல்லோரையும் எச்சரிக்கை செய்திருந்தார் அதனை அப்போது எவரும் 'சீரியஸான' விடயமாக எடுத்துக் கொள்ளவில்லை.

இன்று 'இன்ரநெற்' மூலம் சிறுவர் விபச்சாரம் சட்டத்திற்குப் புறம்பாக, கேவலமாக விளம்பரப்படுத்தல் வரை விசுவரூபமெடுத்து விட்டது. இத்தீய செயல் தொடர்பாக தரகர்களும் தோன்றிவிட்டனர்.

ஆய்வின்படி சிறுவர் விபச்சாரத்தில் ஈடுபடுகின்ற மாணவ மாணவிகள் பெரும்பாலும் பாடசாலை செல்கின்றவர்கள். 11 - 17 வயதிற்கு இடைப்பட்டவர்கள் ஆனால் சுற்றுப் பயணிகள் பெரும்பாலும் வட ஐரோப்பியர்கள் 25-35 வயதிற்கு இடைப்பட்டவர்கள். அதிலும் ஜெர்மனி, சுவீடன் நாடுகளைச் சேர்ந்தவர்கள் அதிகம். ஆண், பெண் சுற்றுப் பயணிகள் இச் சிறுவர்களுடன் தன்னின அல்லது வேற்றினச் சேர்க்கை அல்லது இரண்டிலும் ஈடுபடுகின்றனர்.

கடற்கரை, வீதிகள் மற்றும் நகரப்பகுதிகளில் இவர்கள் பிள்ளைகளைச் சந்தித்து ஆசை காட்டி சிநேகிதம் பிடித்து தமது வக்கிர ''செக்ஸ்'' உணர்ச்சிகளுக்கு இப்பிள்ளைகளைப் பலியாக்கி வருகின்றனர். இவர்களின் பாலுறவு முறைகளை ஆராயும் போது எயிட்ஸ் என்ற உயிர்கொல்லி நோய் பற்றி இவர்கள் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

தம்முடன் பாலுறவு கொள்ளும் பிள்ளைகளுக்கு பணம், உணவுப்பார்சல்கள், இனிப்புகள், உடுப்புகள், பாடசாலை உபகரணங்கள் போன்றவற்றை வழங்கியுள்ளனர்.

எத்தனை தடவை பாலுறவு வைக்கப்பட்டது என்பதன் அடிப்படையில்கொடுப்பனவு தீர்மானிக்கப்பட்டது.

ஒரு தடவைக்கு ஆண் பிள்ளைக்கு 200 ரூபாவும், பெண் பிள்ளைக்கு 1000 ரூபாவும் வழங்கப்பட்டதாக 1994 ஆம் ஆண்டு தெரிவிக்கின்றது. தற்போது பலமடங்கு அதிகரிப்பு ஏற்பட்டிருக்குமென அனுமானிக்கலாம்.

தம்மிலும் வயதுகூடிய ஆண் பெண் சுற்றுப்பயணிகளுடன் இச் சிறுவர் சிறுமியர் விநோதமாக பாலுறவில் ஈடுபடுவது இவர்களுக்கு உள, உடல் ரீதியான தீமைகளை ஏற்படுத்துமென்பது சிந்திக்கத் தெரிந்தஅனைவருக்கும் இலகுவில் புரியும்.

வடக்கு- கிழக்கில் வாழும் பிள்ளைகள் ஒருபுறம் உள்நாட்டுப் போரின் வடுக்களைச் சுமந்துவரும் நேரத்தில் தென்னிலங்கையில் வாழும் சிறார்களில் குறித்த பிரிவினர் பாலியல் ரீதியாக வெளிநாட்டவரால் பெருமளவு சுரண்டப்படுகின்றார்கள்.

இவர்களின் எதிர் காலம் இருண்டு வருகின்றது.

எனவே சிறுவர் விபச்சாரம் என்ற கொடிய வெளிநாட்டு ''முதலீட்டை'' அனைவரும் திரண்டு முளையிலேயே கிள்ளியெறிய முற்படவேண்டும். இல்லையெனில் முழு இலங்கையும் இதனால் தாக்கப்படும் அபாயம் உள்ளது.

கே ஆர்

# இயல்பு வாழ்க்கை மீளவேண்டும்

## ஜனதா தளம் கோரிக்கை

(சென்னை)

நாடு முழுவதுமுள்ள மத அடிப்படையிலான அமைப்பு களைத் தடைசெய்யவேண்டு மென ஜனதா தளம் கோரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பாகப் புதுடில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய ஜனதாதளத்தின் செய்தித்தொடர்பாளர் மோகன் பிரகாஷ் கோவைக் குண்டு வெடிப்பினைத் தொடர்ந்து முஸ்லீம் அமைப் புகளைத் தமிழ்நாடு அரசு தடைசெய்ததை வரவேற்ப தாகவும் தெரிவித்தார்.

கோவைப் பகுதிகளில் இயல்பு வாழ்க்கையை மீளக் கொண்டுவருவதுதான் மிக முக்கியமானதெனத் தெரி வித்த அவர், இக்குண்டு வெடிப்புச் சம்பவத்தை யாரும் அரசியலாக்க வேண் டாமெனவும் கேட்டுக்கொண் டார். இதேவேளை ஜனதா தளம் கட்சியின் தோழமைக் கட்சியான மார்க்சீய கம்னியூசக் கட்சியின் பொதுச் செயலாளரும் இக்கருத்தினை வலியுறுத்தி சென்னையில் நடைபெற்ற செய்தியாளர் கூட்டத்தில் கருத்துத் தெரி வித்தார்.

## இந்திய ஜனாதிபதி தேர்தலில் வாக்களித்தார்

இந்திய ஜனாதிபதி கே. ஆர் நாராயணன் நேற்று வாக்களித்துள்ளார் இந்திய சுதந்திர வரலாற்றிலேயே இம் முறை தான் ஜனாதிபதி வாக்களித்துள்ளார். தாம் எந்தவொருகட்சிக்கும் சார் பானவர் இல்லை என உணர்த்தும் பொருட்டே ஜனாதிபதிகள் இதுவரை காலமும் வாக்களிக்காது வந்தனர்'

ஆனால் தற்போதைய இந்திய ஜனாதிபதி கே. ஆர் நாராயணன் அவர்களோ சுயவிருப்பத்தின் பேரில் தன் வாக்கினை இன்று செலுத்தி உள்ளார் மக்களோடு மக்களாக வரிசையில் நின்றே ஜனாதிபதி தன் வாக்கை செலுத்தினார்.

## குண்டு வெடிப்பு நபர்கள் வெளிநாட்டமைப்புடன் சதி

### மத்திய உள்துறைசெயலர்

கோவை தொடர் குண்டு வெடிப்பின் சூத்திரதாரிகளுக் கும் வெளிநாட்டு அமைப் பொன்றிற்கும் இடையே தொடர்புகள் இருப்பதாக மத்திய உள்துறை செயலாளர் வி.பி சிங் தெரிவித்துள்ளார். இச்சம்பவத்திற்கும் தமிழ் நாடு அரசால் தடை விதிக்கப்பட்டுள்ள இரு முஸ்லிம் அமைப்புக்களில் ஒன் றிற்கும் நெருங்கிய தொடர் புகள் இருப்பதாகவும், கோயம்புத்தூரில் கைதுசெய்யப் பட்டு விசாரணைக்குட்படுத் தப்பட்டுள்ள எட்டுப் பேர் களின் மூலம் இது தெரியவந் துள்ளதாகவும் அவர்கள் பி.ரி.ஐ செய்தி ஸ்தாபனத் திடம் தெரிவித்தனர்.

## ஜனாதிபதியின் புதிய செயலாளர்

சிரேஷ்ட சிவில் அதிகாரியாக கடமையாற்றிய எம்.டி.டி. பீரிஸ் ஜனாதிபதியின் செயலாளராக நியமிக் கப்படலாம் என்று நம்பகமான செய்திகள் கூறுகின் றன.

இவர் ஏற்கனவே கல்வி உயர் கல்வி அமைச்சரின் செயலாளராக கடமையாற்றி கடந்த வருடம் முடிவில் ஒய்வு பெற்றவர்

தற்போது ஜனாதிபதி செயலாளர் பதவியில் இருக் கும் பாலபட்ட பென்டி தமது சுய விருப்பின் பேரில் பதவியில் இருந்து விலகப் போவதாக தெரிவித்துள் ளார் என்றும் அவர் விலகி னால் வெளிநாட்டுத் தூதுவ ராக நியமிக்கப்படப் போவ தாவும் நம்பகமான செய்தி வட்டாரங்கள் கூறுகின்றன.

## பீஹாரில் குண்டு வெடிப்பு

நேற்றைய தினம் இந்தியத் தேர்தலில் வாக்களிப்பு நடை பெற்றுக் கொண்டிருந்த வேளையில் பீஹார் மாநிலத்தில் இடம் பெற்ற குண்டுவெடிப் பில் 15 பேர் கொல்லப்பட்ட னர் 6 பேர் காயமடைந்தனர் இதனால் பீஹார் மாநிலத் தில் வாக்களிப்பு ஒழுங்காக நடைபெற வில்லை.

## பாரத அணி வெற்றி

பாரதத்தின் இயண்டட் - மகேஸ் பூபதி ஜோடிதுபாயில் ஒபன் டென்னிஸ் பட்டத் தினை வென்றுள்ளது. துபாயினில் நேற்று முன் தினம் அமெரிக்க நாட்டைச் சேர்ந்த டோன் ஜோன்சன் - பிரான் சிஸ்கோ வரன்சனார்ட் ஜோடியினை 6 - 2, 7 - 5 என்ற தொகுதி அடிப்படையில் தோற்கடித்து வெற்றியீட்டினர்.

## குண்டுடன் வந்தவர் தீ மூட்டிக் கொலை

கோயம்புத்தூரில் நிகழ்ந்த குண்டு வெடிப்பினைத் தொடர்ந்து அங்கு வன்முறைச்சம் பவங்கள் தலை தூக்கி உள் ளன. வெடிகுண்டுகளுடன் மோட்டார்சைக்கிளில் வந்த ஒருவரை பொதுமக்கள் மடக்கி பிடித்து தீவைத்து கொழுத்தி உள்ளனர்.

இதேவேளை கடந்த சனிக் கிழமை மோட்டார் சைக்கி ளில் வந்துகொண்டிருந்த ஒரு வரை கோஷ்டி ஒன்று மறித்து தீவைத்து கொழுத்தி உள்ள னர். இவரிடம் உண்மையில் குண்டு இருந்ததா? எனும் சந்தேகம் எழுந்துள்ளது' இந்நபரை வன்முறையா ளர்கள் தாக்கி கொன்றுவிட்ட தாகவே நம்பப்படுகின்றது.

## உயர்தர பரீட்சை முடிவுகள்

கடந்த வருடம் நடை பெற்று முடிந்த ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சை பெறு பேறுகள் நாட்டில் உள்ள சகல பாடசாலைகளுக்கும் தபால் மூலம் அனுப்பிவைக்கப் பட் டுள்ளன. கொழும்பிலும் அதன் சுற்றுப்புறத்திலும் உள்ள பாடசாலைபரீட்சார்த் திகளுக்கான முடிவுகள் ஏற்க னவே கிடைத்திருக்கும் எனவும் வெளியூர் பாடசாலை பரீட்சாத்திகளின் முடிவுகள் இன்று அல்லது நாளைகிடைக் கும் என பரீட்சை திணைக் களம் தெரிவிக்கின்றது. தனிப் பட்ட பரீட்சாத்திகளின் பெறு பேறு அட்டவணைகள் இன்று அனுப்பிவைக்கப்படும்.

## வரியிறுப்பாளர் அங்கலாய்ப்பு

யாழ் கோட்டைக்கு அண் மையில் உள்ள மாநகரசபைக் குச் சொந்தமான ஆதனங் களும் துப்பரவு செய்யப்பட் டிருந்த நிலையிலும் சுப்பிர மணியம் பூங்கா, திறந்தவெளி அரங்கு, பழைய யாழ் நூலக வளாகம் என்பன கோணல்புளி, ஆலமரம்' அரசமரம் போன்ற மரங்கள் நிறைந்து காடாகக் காட்சி அளிக்கிறது.

இவைகளும் திருத்தப்பட்டு நகர் அழகுபடுத்தப்படாதா என வரியிறுப்பாளர்கள் அங் கலாய்க்கின்றனர்.

## அமைச்சர் கட்டும் ஆடம்பரமாளிகை

மலை நாட்டில் ஒருஅமைச் சர் தனது இரு சகோதரர் களுக்காக ஒவ்வொன்றும் ஐம் பது லட்சம் ரூபாசெலவில்இரு வீடுகளையும், ஒருகோடிரூபா செலவில் தனக்கு ஒரு ஆடம் பர மாளிகையையும் கட்டிவரு வதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மலைநாட்டில் மக்களை வியப்பில் ஆழ்த்தும் விஷயம் இதுதான். அங்கிகரிக்கப் படாத ஒரு நிலத்தில் எப்படி இந்த வீடுகளை கட்டமுடிந் தது.

## உலகில் பெரிய சந்தையை சார்க் உருவாக்க வேண்டும்

தென்னாசிய பிராந்திய நாடுகளின்சங்கமான''சார்க்' இந்தநூற்றாண்டின் இறுதிக் குள் விரிவான பிராந்திய பொருளாதார அமைப்பாக மாற்றுவதற்கு தென்னாசிய நாடுகளிடையே பொருளா தாரஒத்துழைப்பை வேகமாக விரிவாக்கு மாறு செயலாளர் ரகுநாத் அறிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில் உலகிலேயே மிகப்பெரிய சந்தை என்றும் இந்த பிராந் தியத்திலே உள்ள அனைத்து நாடுகளிலும் உலகிலேயும் மிகப் பெரிய சந்தையாகவும் தென்னாசியா தான் இருக் கின்றது. உலகப்பொருளா தாரத்துடன் போட்டியிட இந்த பிராந்தியத்தில் உள்ள அனைத்து நாடுகளும் ஒன்றி ணைந்து பணிபுரிய வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

## உலகப் பொருளாதாரத்துடன் சார்க் போட்டியிட வேண்டும்

தென்னாசிய பிராந்திய நாடுகளின் சங்கமான ''சார்க்'' அமைப்பினை இந்த நூற்றாண்டின் இறுதிக் குள் விரிவான பிராந்திய பொருளாதார அமைப்பாக மாற்றுவதற்கு தென்னாசிய நாடுகளிடையே பொருளா தார ஒத்துழைப்பை வேகமாக விரிவாக்குமாறு இந்திய வெளியுறவு செயலரான கே.ரகுநாத் கேட்டுக் கொண்டுள்ளார்.

அவர் மேலும் உலகப் பொருளாதாரத்துடன் போட் டியிட இப் பிராந்தியத்தில் உள்ள அனைத்து நாடுகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் எனக் கேட்டார்.



## வாசகர் கடிதங்கள்

### நல்வரவு

'சூரியகாந்தி' புதுவரவு, நல்வரவு. ஆரோக்கியமான வரவு. நாம் எல்லோரும் மகிழும் வரவு. எங்கள் வீட்டில் எல்லாருக்குமே நன்கு பிடித்திருக்கிறது.

சுளிபுரம் — க. பிரசன்னா

### மனம் நிறைந்த பாராட்டுக்கள்

சில 'கனமான' விஷயங்கள், பல 'சுவையான' விஷயங்கள், சில 'திரும்பத் திரும்ப' படிக்கவேண்டிய விஷயங் கள். ஒரு தினசரிப் பத்திரிகையில் இப்படியான விஷயங்கள் தொடர்ந்து வருவது பாராட்டத்தக்கது.

சாவகச்சேரி — வி. சந்திரசேகரன்

### சாதித்து விட்டீர்கள்

'சற்று வித்தியாசமான பத்திரிகை' என்று சொல்லியதை சாதித்து விட்டீர்கள். தமிழருக்கு ஒரு புது வரவு 'சூரிய காந்தி'. இது யாழ்ப்பாணத்திலிருந்து வருகிறது என்பது எங்களுக்கெல்லாம் பெருமை.

கோப்பாய் — திருமதி. எஸ். பொன்னுத்துரை

### சென். ஜோன்ஸ் பொடிசுகள்

'கிரிக்கெட்' பற்றிய கட்டுரை சுவையாக இருந்தது. இப்படிச் சுவையாகவும், சிறப்பாகவும் எழுதக்கூடிய 'மீரா' இத்தனை காலமும் எங்கே இருந்தார்? சென். ஜோன்ஸ் பொடிசுகளைப் பற்றிக்கூட கவனமாக எடுத்து எழுதியிருக் கிறார். எனது பாராட்டுக்கள்.

யாழ்ப்பாணம். — 'கஜன்'

### "தலையங்கம்" தனி விசேஷம்

ஒவ்வொரு நாளும் தலையங்கம் அபாரம். அற்புதம்!

கருத்துக்களை ஆணித்தரமாகச் சொல்வதும், ரசமாகச் சொல்வதும், மனதில் பதியும்படி சொல்வதும், விஷயத் தெளிவோடு சொல்வதும் மிக நன்றாக இருக்கின்றன.

யாழ்ப்பாணம் — டாக்டர் சி. அனுஷ்யந்தன்

### "பிரதேச" முக்கியத்துவம்

'பிரதேச' செய்திகளுக்கு தேவையான அளவுக்கு முக்கி யத்துவம் தருவதும், பக்கச் சார்பற்ற முறையில் செய்திகளை வெளியிடுவதும், ஆசிரிய தலையங்கத்தில் மதில்போல் பூனை யாக இல்லாமல் கருத்துக்களை உறுதியாகத் தெரிவிப்பதும் செய்திகளின் நேர்மையான தெரிவும் வாசகர்கள் மத்தியில் ஒரு தனியான கண்ணியத்தையும், கௌரவத்தையும் 'சூரிய காந்தி'க்கு தேடித் தந்திருக்கின்றன.

பருத்தித்துறை — எஸ். திருச்செல்வம்

### எல்லாருக்கும் பிடிக்கிறது

பத்திரிகை பணம் பண்ணுவதற்கான ஒரு சாதனம் அல்ல என்ற உணர்வோடு செயற்படுவது சமூகத்தில் உங்களுக்கு ஒரு தனியான கௌரவத்தை தேடித் தந்திருக்கிறது. உங் கள் துணிச்சலும், எழுத்து வல்லமையும், நல்ல ரசனையும் எங்களுக்கு ஒரு நல்ல பத்திரிகையைத் தந்திருக்கின்றன. எங் கள் வீட்டில் பிள்ளைகள் எல்லாரும் 'சூரிய காந்தி'யைத் தான் விரும்பிப் படிக்கிறார்கள். இளைஞர்களின் மனத்தைக் கெடுக்காமல் அவர்களைக் கவர்ந்திருப்பது உங்கள் திறமை யைக் காட்டுகிறது.

வண்ணார்பண்ணை — திருமதி ராணி மகேந்திரராசா

## இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்

புத்தூர் - சுன்னாகம் வீதியில் துப்பாக்கிச்சூட்டுச் சம் பவமொன்றில் கொல்லப் பட்ட நபரொருவரின் சடலம் நேற்றுக்காலை கண்டுபிடிக் கப்பட்டது.

நேற்று முன்தினமிரவில் இனந்தெரியா நபர்களால் வீதியில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்ட மேற்படி நப ரின் சடலம் யாழ் போதனா வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டு, இனங்காணப்படு வதற்காகச் சவச்சாலையில் வைக்கப்பட்டிருப்பதாக வைத்தியசாலை வட்டாரங் கள் தெரிவித்தன. சுட்டவர் யார் என்பதும் தெரிய வில்லை. செத்தவர் யார் என்பதும் தெரியவில்லை.

# பத்திரிகையாளர்களுக்கு எதிராக மானநட்ட வழக்குத் தொடரமுடியாது

**விக்டர் ஐவன்**

பத்திரிகையாளர்களுக்கு எதிராசச் சட்டமா அதிபர் மானநட்ட வழக்குத் தொடுக்கும் உரிமைக்கு ராவய பத்திரிகை ஆசிரியர் விக்டர் ஐவன் சவால் விடுத்துள்ளார். கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தனக்கு எதிராக அவதூறு வழக்குத் தொடரப்பட்டுள்ளது என்றும் இது தனது அடிப்படை உரிமைகளை மீறுவதாகும் என்றும் அவர் கூறியுள்ளார்.

பதின்னான்கு பக்கங்கள் கொண்ட அவரது முறைப்பாட்டில் சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாடு கைவிடப்பட வேண்டுமென்றும் தனக்கு பத்து இலட்சம் ரூபா நட்டஈடு வழங்கப்படவேண்டுமென்றும் அவர் கோரியுள்ளார்.

நீதித்துறையைப் பரீட்சிக்கும் வகையிலும் சிவில் சட்டங்களின் கீழ் அல்லாமலும் கொலைக்குற்ற சட்டங்களின் கீழ் பத்திரிகையாளர்கள்மீது வழக்குத் தொடராமல் இருப்பதை நிச்சயிக்கவே இவ் வழக்கைத் தான் தொடுத்து இருப்பதாக அவர் தெரிவித்தார்.

# மனித உரிமைகள் ஆணைக்குழு தலையீடு கைதானோர் விடுவிப்பு

நேற்று முன்தினம் மாலை 7.30 மணியளவில் யாழ் புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தி னருகில் வைத்து ஒரு மாணவனும் ஆசிரியர் ஒருவரும் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து குழறும் சத்தங்கள் கேட்டதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். இவர்களிருவரும் தாக்கப் பட்டிருக்கலாமென நம்பப்படுகிறது.

இவர்களு்டன் வந்த சக மாணவனொருவர் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் புகாரிட்டதை யடுத்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலையீட்டினால் இவர்களிருவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

## மனித உரிமை மீறலில் இராணுவ அதிகாரிகள்

மனித உரிமை மீறல்களுக்காக நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்படவுள்ள 120 பேரில் சில உயர்ராணுவ உத்தியோகத்தர்களும் அடங்குவார்

வெளிநரட்டு அமைச்சில் நடைபெற்ற மாநாடொன்றில் கருத்துத் தெரிவித்த உயர் அதிகாரி ஒருவர் இவர்களின் கோவைகள் சட்டமா அதிபர் காரியாலயத்தில் இருப்பதாகவும் விசாரணை முடிவுள்ள 30 பேருக் குஎதிராக குற்றச்சாட்டுக் குரிய போதிய சாட்சியங்கள் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

## முன்னாள் அரச அதிபர்மீது விசாரணை எதிர் வரும்24ல்

முன்னாள் யாழ் அரசாங்க அதிபர் செல்லையா பத்மநாதன் கொழும்பு மேல் நீதிமன்றத்தின் முன் எதிர்வரும் 24ம் திகதிஆஜராக வேண்டுமென அந்த நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

புலிச் சந்தேக நபர்களைப் பற்றிய செய்திகள் தெரிந்திருந்தும் அதனை அறிவிக்காது மறைத்திருந்தார் என்று பத்மநாதன் மீது பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் அற்றொனி ஜெனரல் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்துள்ளார்.

## கிரிக்கெட்

கடந்த 13ம், 14ம் திகதிகளில் ஸ்கந்தவரோதயகல்லூரிக்கும் பரியோவான் கல்லூரிக்கும் இடையில் சுன்னாக விளையாட்டுத்திடலில் நடைபெற்ற சிநேக பூர்வ கிரிக்கட் போட்டியில் பரியோவான் கல்லூரி 9விக்கட்டுக்களால் வெற்றி பெற்றது. ஸ்கோர் விபரங்கள் பின்வருமாறு:-

ஸ்கந்தா முதல் இனிங்ஸ் 129 ஓட்டங்கள பிரகாஷ் 30 ஓட்டங்கள், ஜொனித்தன் 29 ஓட்டங்கள் பீ. டினேஸ் 25 ஓட்டங்கள் 4 விக்கட்டுகள்.

பரி. யோவான் முதல் இனிங்ஸ் 178 ஓட்டங்கள் பீ. டினேஸ் 55 ஓட்டங்கள் கோகுலன் 52 ஓட்டங்கள் பந்து வீச்சு பிரகாஷ் 54 ஓட்டங்கள் 5 வி. ஜொனித்தன் 52 ஓட்டங்கள் 5வி.

ஸ்கந்தா இரண்டாவது இனிங்ஸ் 82 ஓட்டங்கள் பந்து வீச்சு பீ. டினேஷ் 25 ஓட்டங்கள் 5வி. பிரகாஷன் 31ஓட்டங்கள் 5வி.

பரியோவான் கல்லூரி இரண்டாவது இனிங்ஸ் 33 ஓட்டங்கள் 1 வி.

## எறிகணை வீச்சு

நேற்று முன்தினமிரவு இராணுவத்தினர் யாழ்நகரின் கரையோரப் பகுதிகளை நோக்கி எறிகணைத்தாக்குதலை மேற்கொண்டதுடன் பராவெளிச்சத்தையும் ஏவினர்.

## 190 குடும்பங்கள் மீளக்குடியேற்றம்

வசாவிளான் கிழக்கு கிராமசேவையாளர் பிரிவான குட்டியபுலம், கோணாவலை பகுதிகளில் 190 குடும்பங்கள் மீளக்குடியேறி இருப்பதாக தெல்லிப்பழை உதவிஅரசாங்கஅதிபர் பிரிவு புள்ளிவிபாங்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு குடியேறிய மக்களுக்கு 81கொட்டில்களை யூ.என்.எச்.ஈ.ஆர் அமைத்து கொடுத்துள்ளது.

## எம்.பிகளுக்கு சுக்கிரதசை

நாடாளுமன்ற உறுப்பினர்களின் சர்ச்சைக்குரிய புதிய சம்பளத் திட்டம் ஒத்தி வைக்கப்பட்டபோதிலும், அவர்களின் ''சுக்கிரதசை'' நன்றாகத்தான் ஆரம்பமாயிருக்கிறது.

சென்ற ஜனவரி மாதத்திலிருந்து அவர்களுக்கு மேலதிகமாக ரூபாய் ஆறாயிரத்து ஐநூறும் அலவன்ஸாகக் கிடைக்கிறது.

எம. பிக்களின் எரிபொருள் அலவன்ஸ் ஐயாயிரம் ரூபாவினாலும், டிறைவர்கள் அலவன்ஸ் ஆயிரத்து ஐநூறு ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

## 10,000 ஆசிரியர் நியமிக்கப்படுவர்

10,000 ஆசிரியர்கள் விரைவில் நியமிக்கப்படவுள்ளனர். 1996ம் ஆண்டு நடைபெற்ற போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் இவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களின் பெயர்ப் பட்டியல் அந்தந்த மாகாண சபைகளுக்கு அனுப்பப்படவுள்ளது. நியமனத்திற்கு முன்னர் இவர்களுக்கு மூன்றுவாரகால விசேட பயிற்சியும் வழங்கப்படும். விரைவில் இவர்கள் பாடசாலைகளுக்குநியமனம் பெறுவர்.

## ஒன்றினைந்த..

எமது பகுதியைக் கட்டியெழுப்ப வேண்டுமானால் அதற்கு முதலில் யுத்தம் நிறுத்தப்படல் வேண்டும். யுத்தம் நிறுத்தப்பட வேண்டுமானால் போராடும் சக்தியான விடுதலைப்புலிகளுடன் அரசு பேச்சுக்களை நடாத்துவது மிக முக்கியமானதாகும், எனவே யுத்தம் நிறுத்தப்படாத எந்த நிகழ்வும் பிரயோசனமாக அமையாது எனவும் அவர் தெரிவித்தார்,

தீர்க்கமான அரசியல் தீர்வு திட்டம் ஏற்படாத சூழலில் பொதுமக்களின் இன்னல்களைப் போக்க முடியாது, எனவே யுத்தநிறுத்தம், பேச்சுவார்த்தை, அரசியல்த்திட்டம் ஆகியன உடன் நடைபெற வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்,

விளம்பரம் செய்ய

"சூரியகாந்தி"
68/1 ராசாவின் தோட்டம் வீதி,
யாழ்ப்பாணம்.

விளம்பரதாரர்கள்:
யாழ்நகரில் அமைந்துள்ள
**பரணன் அசோசியேட்ஸ்**
81, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்ற முகவரியிலும் விளம்பரங்களை கையளிக்கலாம்.

# இந்தியத்தேர்தல் 55 விகிதம் வாக்களிப்பு

இந்தியாவில் 15 மாநிலங்களுக்கும் 5 யூனியன் பிரதேசங்களுக்கும் 222 தொகுதிகளில் நடைபெற்ற தேர்தலில் 55சதவிகிதமானமக்கள் வாக்களித்துள்ளனர். தமிழ் நாட்டில் 48 சதவிகிதமான மக்கள் வாக்களித்துள்ளனர்.

காலையில் வாக்களிப்பு மந்தமாகவும் பின்னர் சுறுசுறுப்பாகவும் நடைபெற்றது. பீஹாரில் இடம்பெற்ற வன்முறைகளையடுத்து பீஹாரில் வாக்களிப்பு சீர்குலைந்தது.

# சேதமுற்ற நவீன சந்தை திருத்தவேலைகள் ஆரம்பம்

யாழ்.நகரில் நடைபெற்ற யுத்த அனர்த்தங்களால் நீண்டகாலமாக திருத்தவேலைகள் எதுவும் இன்றி சிதைவடைந்த நிலையிய் காணப்பட்ட நவீனசந்தை கட்டடத் தொகுதி இப்போது மீண்டும் திருத்தவேலைகளுக்கு உட்படுகின்றது.

யாழ். மாநகார சபைக்கு சொந்தமான இக்கட்டிடத் தொகுதியின் திருத்தவேலைகள் போக்குவரத்திற்குபெரும் இடைஞ்சலாக உள்ளது. உடைக்கப்படும் கற்தூள்களும், தூசுகளும் போவோர் வருவோருக்கு பெரும் சிரமத்தை உண்டுபண்ணுவதை அவதானிக்க முடிகின்றது எனினும் சரிந்து விழும் அபாய நிலையில் இருந்த இக்கட்டடம் அவ் ஆபத்தில் இருந்தது மீழ்வதை காணமுடிகின்றது.

# இராணுவ இரகசியங்கள் காட்சிப் பொருளாகின்றது

கட்டுநாயக்கா விமானத்தளத்தினுள் வேவு பார்க்கச் முயன்ற இளைஞர் கைது யுவதி தடுத்துவைக்கப்பட்டார் என்ற செய்திகள் ஒரு புறமிருக்க இராணுவ ஆய்வாளர்கள் இராணுவத்தள தகவல்களை புலிகளிற்குத் தெரிய வழி கோலுகின்றார்கள் என்ற சர்ச்சைகளிற்கிடையே கண்டோரை வியப்புறவைத்தது ஒரு காட்சி,

''பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபப் பகுதியில் சுதந்திரதின பொன்விழாக் கொண்டாட்டத்தை முன்னிட்டு அமைக்கப்பட்டிருந்த தகவல் நிலையங்களில் ஒன்றிலேயே நெருங்க முடியாத விமானப் படையினரின் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் மாதிரி கட்டமைப்பே அதுவாகும். விமானம் ஓடும்பாதை, தரையிறக்கும் வழிகள், மேலதிகபாதைகள் மற்றும் விமானக் கட்டுப்பாட்டு கோபுரம் மற்றும் தாக்குதலிற்கு உள்ளாகக்கூடிய நிலைகள் அனைத்துமே துல்லியமாக விளங்க வைக்கப்பட்டிருந்தது. பார்த்திருந்த 'பத்திரிகையாளர் ஒருவர் காதோடு கூறினார்'' எல்லா விடயங்களுமே இப்படி இலகுவாகக் கொட்டிக்கிடக்க அவர்கள் ஏன் கஷ்டப்பட்டு வேவு பார்க்க வேண்டும்'' பத்திரிகையாளர்கள் ஏன் காட்டிக்கொடுக்க வேண்டும்.

## குடும்பஸ்தர் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் குடும்பஸ்தர் ஒருவர் விசேட அதிரடிப் படையினரால் கைதுசெய்யப்பட்டு சித்திரவதைகளின் பின் கொல்லப்பட்டுள்ளார்.

தவராசா லோகிதராசா என்ற நாற்பத்தெட்டு வயதுடைய குடும்பஸ்தரே இவ்வாறுவிசேட அதிரடிப்படையால் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டதாக புலிகளின் குரல் அறிவித்துள்ளது.

## அரசாங்க...

ருத்தை தெரிவித்த அவர்கள் தொடர்ந்து தெரிவிக்கையில் யாழ் மாவட்டத்திலுள்ள எல்லா அரச அலுவகலங்களிலும் ஊழல் நிறைந்து காணப்படுவதாகவும் அவற்றில் கூடியஊழல்மாநகரசபையிலேயேஇடம்பெறுவதாகவும் சுட்டிக்காட்டினார்கள்

இதேவேளை சுதந்திரக்கட்சியால் செய்யப்படும் சிபார்சுகள் நிராகரிக்கப் படுவதாகவும் ஆனால் ஆயுதக் குழுக்களின் செல்வாக்கு இந்நிகழ்வால் அதிகரித்து செல்வதுடன் அதிகாரிகளும் அவர்களின் சிபார்சுகளை ஏற்பதாகவும் தாம் ஜனாதிபதிக்கு நேரில் தெரிவித்ததாகவும் தெரிவித்தார்கள்.

தற்போது இயங்கும் வெண்தாமரை இயக்க யாழ் கிளை அரசின் அனுமதி இன்றியே இயங்குவதாகவும் இவ்வலுவலகத்தை உடன் மூடும்படி பணிக்கப்பட்ட போதிலும் இன்றுவரையும் தொடர்ந்து இயங்குவதாகவும் இதனை மூட பலர் பின்னிற்பதாகவும் அவர்கள்தெரிவித்தார்கள்.

## சைப்பிரஸ் தேர்தலில் மீண்டும் வெற்றி

சைப்பிரஸில் கன்சவேர்டிவ் கட்சி வேட்பாளரான கிளாஸ்கோ ஷெரிப் குறுகியா மெரும்பான்மை ஆதரவுடன் இரண்டாம் முறையாக பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அவரிற்கு ஆதரவாக 50.8 புள்ளி வாக்குகள் கிடைத்தன. அவரை எதிர்த்துப் போட்டியிட்ட முன்னாலைய வெளியுறவு அமைச்சர் டோன் இயகோகோ 49.2 புள்ளி வாக்குகளையே பெறமுடிந்ததாகவும் தெரியவருகின்றது. அனைத்துக் கட்சி கூட்டு அரசொன்றினை அமைக்க முயல்வதாக அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

## ரூபவாஹினி டைரக்டர் ஜயசிங்கா ராஜினாமா

'ரூபவாஹினி'' கூட்டுத்தாபன டைரக்டர் ஜெனரல் டபிள்யூ.ரி. ஜயசிங்கா தனது பதவியை ராஜினாமாச் செய்திருப்பதாக தெரியவருகிறது.

அரசியல் எதிரிகளை நையாண்டி செய்யக்கூடிய சில தொலைகாட்சி நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவது தொடர்பாக ஜயசிங்காவுக்கும் சில அரசியல் தலைவர்களுமிக்குடையே எழுந்துள்ள அபிப்பிராய பேதமே அவரது ராஜினாமாவுக்கு காரணம் என தெரியவருகிறது.

காலஞ்சென்ற உபாலி விஜயவர்த்தனா தொடர்பாக ஒளிபரப்பப்பட்ட நிகழ்ச்சி பற்றி ஜயசிங்கா கொண்டிருந்த கருத்துக்களே அவரது ராஜினாமாவுக்கான உடனடிக் காரணமாக கருதப்படுகிறது.

''சூரிய காந்தி'' நிறுவனத்துக்காக அவர்களது அச்சகத்தில் 1998ம் ஆண்டு பிப்ரவரி 17ம் தேதி 68/1, ராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. ஆசிரியர்: சு. குமாரசாமி.